‘திராவிட மாடல்’ கொள்கை வென்றிட


# வாழ்த்துங்கள் அண்ணனே!

எங்கள் உயிரே... உயிர் மூச்சே... அறிவே... ஆற்றலே... தமிழ் ஊற்றே... பெரியாரின் தளபதியே.. தமிழினத் தலைவரே....

தம்பி வா... தலைமையேற்க .. வா... என அழைத்தவரே..... எண்ணற்ற தம்பிமார்களை பதவிகளில் அமர வைத்து அழகு பார்த்த திராவிடக் கண்ணனே... எங்கள் அண்ணனே! உங்களின் மறைவு நாளாக இந்த நாள் நினைக்கப்படுகிறது. நானோ நான் உங்கள் கொள்கைகள் வாழ்ந்து கொண்டிருக்கும் வரை நீங்கள் வாழ்கிறீர்கள் என்பதாக நம்புகிறேன்.

இன்று நம் முதல்வர் சொல்லுகின்ற திராவிட மாடல் இந்தியா முழுவதும் பேசப்படுகிறது. அன்று நீங்கள் திராவிடம் பேசியபோது உங்களை பிரிவினைவாதி என்றார்கள். அந்தக் கொள்கையை கைவிடவில்லை என்றால் ஜெயிலில் அடைப்போம் என்று மிரட்டினார்கள். ஆனால் கடந்த 75 ஆண்டுகளாக உங்கள் ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது. இன்று நம் முதல்வர் திராவிட மாடல். ஆட்சியை நடத்துவதோடு. இதுதான் ஒன்றியத்தில் இருக்கும் சனாதன சன்மார்க்க அரசியலுக்கு மாற்று என்று சொல்லி ஒன்றிய அரசின் வயிற்றிலே புளியை கரைத்து விட்டிருக்கிறார்.

இதனால் ஒன்றிய அரசு ஆட்டம் காணுகிறது. அச்சப்படவும் செய்கிறது. ஒன்றிய அரசு இன்று நான் முதல் எதிரியாக கழகத்தையே கருதுகிறது. எதிர் வரப்போகும் மாநில தேர்தலில் கழகத்தையும் நமது முதல்வரையும் தோற்கடிப்பதையே தன் முதல் பணியாக எண்ணி பணியாற்றி வருகிறது.



அண்ணனே....! உங்கள் தலைவர் பெரியாரும். உங்கள் பிரியத்துக்குரிய தொண்டரான கலைஞரும். உங்கள் இதயக்கனியான எம்.ஜி.ஆர். அவர்களும் ஆசிகள் வழங்கிடதளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் திராவிட மாடல் இந்தியாவின் மாற்று கொள்கையாக தாங்கி பிடித்திருப்பதை வாழ்த்தி.... அந்தக் கொள்கை வென்றிட வாழ்த்துங்கள் அண்ணனே!...



**வி.சி.குகநாதன்**
திரைப்பட
இயக்குநர்

## செய்தி மக்கள் தொடர்புத் துறையின்

# முன்னாள் இணை இயக்குனர் இரா.பரதன் மறைவு!

## கழகத்தினர் – அரசு அலுவலர்கள் அஞ்சலி!

செங்கோட்டை, பிப், 4-

செய்தி மக்கள் தொடர்பு துறையின் முன்னாள் இணை இயக்குனர் இரா.பரதன் அவர்கள் 2.2.2026 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவர் திராவிட இயக்கத்தின் மீது அளவற்ற ஈடுபாடு மிக்கவர். இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் மாணவர் அணியில் தன்னை இணைத்து, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திராவிட கொள்கை சித்தாந்தத்தை பறைசாற்றியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடத்தில் மிகுந்த பாசமும், ஈடுபாடும் கொண்டவர்.



இவர் 1970ஆம் ஆண்டு செய்தித் துறையில் மக்கள் தொடர்பு அலுவலராக பணியில் சேர்ந்து 2006 ஆம் ஆண்டில் பணி ஓய்வு பெற்றார். இவர் பணியாற்றிய அலுவலகங்களில் பணியாளர்களிடத்தில் மிகுந்த அக்கறையும் பாசமும் கொண்டவர். மேலும்,மிகச்சிறந்த பேச்சாளர். தனது கணீர்குரலில் அரசு நிகழ்ச்சிகளில் அனைவரது கவனத்தையே தனது பேச்சால் ஈர்த்தவர்.

இவரின் பணிக்காலத்தில் மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவும், பண்பாளராகவும், துறையின் ஜாம்பவானாகவும் திகழ்ந்தவர். இவரது மறைவு செய்தித் துறையினரிடையே மிகுந்த வேதனையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

இவர் பணிக்காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம், அரசு திட்டங்களை செயல்படுத்துவதில் மிகுந்த நன்மதிப்பை பெற்றவர். மேலும், தனது அரசு பணி காலத்தில் சிறந்த எழுத்து திறமையாலும், ஒப்பற்ற நிர்வாக திறனுடனும், அரசின் முக்கிய திட்டங்கள் சாதனைகள் சிறப்பாக செயல்படுத்தியவர். கன்னியாகுமரியில் அமையப்பெற்ற அய்யன் திருவள்ளுவர் சிலை, வள்ளுவர் கோட்டம், உலகத் தமிழ் மாநாடு மற்றும் பல முக்கிய நிகழ்வுகளில் சிறப்பாக பணியாற்றி கலைஞர் இடத்தில் பாராட்டுகளை பெற்றவர்.

இவர் உடல்நலக்குறைவால் தென்காசி மாவட்டம் செங்கோட்டையிலுள்ள தமது இல்லத்தில் இயற்கையெய்தினார்.

அன்னாரது மறைவுச் செய்தியறிந்து செய்தித் துறை அலுவலர்களும் கழகத்தினரும் அன்னாரது இல்லம் சென்று மறைந்த பரதன் அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பாக பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு தினத்தை முன்னிட்டு நெல்பேட்டை அறிவகத்திலிருந்து அமைதிப் பேரணியாக சென்று அண்ணா சிலைக்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.ஜெயராம் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட நிர்வாகிகள் மா.ஒச்சுபாலு, மூவேந்திரன், ராகவன், முருகவேல், நிர்வாகிகள் அன்வர், வைகை பரமன், ஏ.கே.ஆறுமுகம், முத்து கணேசன், பொன் சேது, பிஸ்மி, உஸ்மான் அலி, குடைவீடு அருண்குமார், திராவிடமாரி உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி யில் பேரறிஞர் அண்ணா வின் 57–வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, காரைக்குடி சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் நல்லசேதுபதி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது , மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் எபனேசர் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மறைந்தாளு(லு)ம் அண்ணா; மனமாளும் அண்ணா!

தொண்டைநாடு
சான்றோர்கள்
தோன்றுமிடம் என்கின்ற
பண்டைமொழி மெய்யாகப்
பாலாற்றுக் காஞ்சியிலே
கண்கவர் பட்டுநெய்யும்
கைத்தறிக் குடும்பத்தில்
மண்குளிர, பெற்றவர்
மனங்குளிரப் பிறந்தவர்
அண்ணா,நீர் இளமைமுதல்
அறிவாகத் திகழ்ந்தவர்,
கண்ணாகப் போற்றிடும்
கல்வியிற் சிறந்தவர்,
விண்புகழ் பெற்றாலும்
விருப்பங்கள் துறந்தவர்!
வெண்ணிலவுக் குளிர்ச்சியும்
விரிகதிர் மிளிர்ச்சியும்
பண்ணுலவும் இனிமையும்
பண்பாக வளர்ந்தவர்!
கண்ணறப் பேசியும்
கருத்தொளிர எழுதியும்
மண்ணதிர வைத்தவர்
மடமையை வதைத்தவர்
வெண்தாடிப் பெரியார்பின்
அறிவேந்தி விரைந்தவர்
கண்ணாடி போலமனம்
களங்கமற்றுத் துலங்கியவர்
நுண்ணோக்குக்
கொண்டவர்
நோயுற்ற சமுதாயப்
புண்ணாற்ற வந்தவர்
பொருகலன் தந்தவர்
மண்ணாற்ற முடியாமல்
மறைந்துவிட்ட பேரறிஞர்
அண்ணாவின் நினைவுநாள்
ஆழ்மனத்தில் உறைகின்ற
எண்ணூறும் நினைவுகள்
எத்தனையோ நிகழ்வுகள்
அண்ணாவை மறக்குமோ?
ஆதவன் இறக்குமோ?

அண்ணா,நீர் பிறந்ததனால்
அல்லவோ தமிழர்கள்
கண்ணிருந்தும் குருடராய்க்
காதிருந்தும் செவிடராய்
உண்கின்ற வாயிருந்தும்
உரையாத ஊமையராய்
மண்ணாகக் கிடந்தவர்கள்
மடமையில் வளர்ந்தவர்கள்
உண்மையை
உணர்வதற்கும்
உரிமையைப் பெறுவதற்கும்
எண்ணத்தைத் தூண்டியே
எழுச்சியை மீட்டியே
வண்ணத்தை
அறியவைத்தீர்
வண்டமிழ் போற்றவைத்தீர்
திண்மையை ஊட்டிவிட்டீர்
திராவிடம் காட்டிநின்றீர்
பெண்ணடிமை
போகவைத்தீர்
பேச்சுரிமை காத்துநின்றீர்
மண்ணுரிமை மீட்பதற்கு
மாபெரும் இயக்கமொன்றை
எண்ணியே தோற்றுவித்தீர்
இன்றுவரை ஆளவைத்தீர்!

ஊர்ஊராய்ச் சென்றுநீர்
ஓயாமல் பேசியதால்
நீர்ஊறும் காவிரிபோல்
நிறையவே எழுதியதால்
வேர்உற ஆழமாய்
விண்ணுற இயக்கத்தைச்
சீர்ஊரும் தன்மானம்
சீர்திருத்தம் பகுத்தறிவு
கார்ஊரும் வானம்போல்
கதிர்ஊறும் ஒளியைப்போல்
பார்உறக் காட்டியதால்
பன்மடங்கு நீட்டியதால்

தேர்ஊரும் அழகுமிகு
திருவாரூர்க் கலைஞரும்
பாராளும் உரிமைபெற்றார்
பார்போற்றும் திறமையுற்றார்!
நீர்ஆண்ட இடத்திருந்து
நீண்டபல திட்டங்கள்
ஊர்போற்றத் தளபதி
உருவாக்கி முடிக்கின்றார்
யார்எனினும் எவர்எனினும்



யாதெனினும் அண்ணா,உம்
பேர்சொன்னால் அன்றிஒரு
பெருவெற்றி ஏதிங்கே?

ஆயிரம் ஆண்டுக்கோர்
அருந்தமிழ் செய்தவத்தால்
ஞாயிறுபோல் பிறந்தவர்,
நானிலத்தில் சிறந்தவர்
ஞாயிறு சின்னமென
நன்றாகத் தேர்ந்தவர்
தாயினும் கனிந்தவர்
தன்னலம் முனிந்தவர்
கோயிலும் கடவுளும்
கும்பிடா திருந்தவர்!

சேயினும் திறந்தவுள்ளம்
செந்தமிழ் சிறந்துதுள்ளும்
தூயவர்,கழகத்தின்
தொண்டருளம் வாழ்பவர்
மாயவர்,பேச்செழுத்தால்
மயக்கித்தான் விட்டவர்;
தீயவர் ஆனாலும்
திருந்தித்தான் வாழ்வதற்கு
ஆயவழி செய்தவர்
அன்புநீர் பெய்தவர்!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

நோயிலே வீழ்ந்திங்கு
நூறாண்டு வாழாமல்
காயிலே உதிர்ந்துவிட்டீர்!
கண்ணீரை ஓடவிட்டீர்,
தாயிலாக் குழந்தையாகத்
தமிழ்நாடு தவிக்கவிட்டீர்
மாயினும் எங்களுளம்
மறையாத மன்னவரே,
போயினும் ஆண்டுபல
பொலிகின்றீர் நெஞ்சங்கள்
ஆயினும் அண்ணா,நீர்
ஆதவன் அல்லவோ?
ஆயிரம் குயில்களின்
அருங்குரலால் சொல்லவோ?

வடபுலம் ஆளுவோர்
வலம்வந்தே எதிர்த்தாலும்
முடவர்கள் என்பது
முடிவிலே தெரிந்துவிடும்!
குடமாக இருப்பவர்கள்
குன்றான நமையெதிர்க்க
அடமாக முயன்றாலும்
அங்குலம் நகராமல்
திடமாக இருப்பவர்கள்
திராவிடத் தமிழரெலாம்
புடம்போட்ட தங்கங்கள்
புவியாளும் சிங்கங்கள்!

கடமையுடன் கண்ணியம்
கட்டுப்பா டெனமூன்றும்
தடமாகக் கொண்டவர்கள்
தலைநிமிர்ந்தே
வெல்பவர்கள்!
உடன்பட்டால் ஏற்றிடுவர்
உயர்வாகப் போற்றிடுவர்
இடர்தந்தால் ஒழித்திடுவர்
இல்லாமல் அழித்திடுவர்!
மடம்பட்டுப் பேசிய
மன்னர்கள் கனகவிசய்
பிடிபட்டுக் கல்சுமந்தார்
பேடிகள் பல்லுடைந்தார்
இடிபட்டுப் பலரிங்கே
இல்லாமற் போனதெல்லாம்
பொடிபோடும் அண்ணாநீர்
புகன்றவை மறப்போமா;
நெடியாக எப்போதும்
நெஞ்சில்வைத் திருப்போமே!

ஆட்சியில் நீர்இருந்த
ஆண்டுகள் இரண்டெனினும்
காட்சிக்கோ எளியராய்,
கனிவிலே இனியராய்
மாட்சியுடன் ஆண்டீரே
மாநிலத் தன்னாட்சி
மீட்சிக்குக் குரல்கொடுத்தீர்
மீண்டால்தான் மாநிலங்கள்
ஆட்சிசெய முடியுமென்றீர்
இல்லையேல் அதிகாரம்
நீட்சிபெறும் தில்லியிலே
நிலைமைகெடும்
இங்கென்றீர்
சாட்சியின்று தமிழ்நாடு
சங்கிலியில் பிணைப்புண்டு!

ஒருமொழிவைத் துலகாண்ட
ஒருகாலத் தமிழ்நாட்டில்
இருமொழிக் கொள்கையே
இயங்குமெனச் சட்டமிட்டீர்
தெருமொழியாம் இந்தியைத்
திணித்திங்கே
மும்மொழியாய்
வருவதைத் தமிழ்நாடு
வழிமறித்துத் திருப்புமென்றீர்
திருப்பெயராம் தமிழ்நாடு
திகழவும் செய்திட்டீர்
குருக்களில்லாச் சீர்திருத்தக்
கொள்கைமணம்
செல்லுமென்றீர்!
இருந்திருந்தால் நீர்இன்னும்
இமயமும் தாழ்ந்திட
அருஞ்செயல் எத்தனையோ
ஆற்றித்தான் இருப்பீரே!
தருக்கர்கள் இடர்களைத்
தடுத்திங்கே தளபதி
பொருகின்றார் தங்கள்வழி
போகின்றார்;
வெல்வதுண்மை!

மக்களெலாம் உமைக்காண
மாபெருங் கடலாகத்
திக்கெட்டும் குலுங்கிடத்
திரண்டெங்கும் திணறினரே!
துக்கத்தில் மூழ்கினரே
துயர்வெள்ளம் ஆழ்ந்தனரே!
பக்கமெலாம் எழும்ஓலம்
பாரீரோ,அண்ணா,யாம்
திக்கின்றிப் போனோமே
திரும்பித்தான் வாரீரோ?

அக்காலன் குருடனாய்
ஆனானோ?பேரறிவு
மிக்க உமை ஏனிங்கு
விழைந்தானோ?
அவனுந்தான்
இக்கூட்டம் காண்கையில்
இரங்கித்தான் அழுவானே!
தக்க உமைக் கவர்ந்ததொரு
தவறென விழுவானே!
இக்கணம் வரையிலும்
இப்படியோர் துயர்வலம்
துக்கத்தால் எழுந்த
தில்லை;
தொடர்ந்தின்றும்
அழுவதில்லை!

இயற்கைதான் தமிழருக்கு
இழைத்துவிட்ட
பெருங்கொடுமை
துயரினும் துயராகும்
தொடர்ந்தெழும்
அலையாகும்!
புயலாகச் சுழன்றடித்துப்
போக்கிவிட்ட அண்ணாவின்
உயிரெங்கே சென்றதென
உலகெலாம் தேடிவரத்
துயின்றிட அண்ணாநீர்
தொட்ட இடம் கடலோரம்!
வயிற்றினும் வாயினும்
வையந்தான் அடித்தழும்!
பயிற்றிட மேன்மேலும்
படிக்கத்தான் போனீரோ?
உயிர்த்திட வருவீரோ?
உணர்வுகள் தருவீரோ!